**05.03.2026.**

**MCOP.No.113/2022**

**ம.சா.1 : மாயக்கண்ணன்**

**<u>2-ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>:-**

4) நான் இந்த மனுவில் ஒப்படைத்துள்ள மருத்துவ பில்கள் மற்றம் போக்குவரத்து பில்கள் அதிகப்படியான நஷ்டஈடு பெறுவதற்காக தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. இந்த விபத்து சமயத்தில் நான் ஓட்டி சென்ற இரு சக்கர வாகனத்தின் இன்சூரன்ஸ் கம்பெனியை இந்த மனுவில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். இந்த விபத்து சமயத்தில் மேற்படி இரு சக்கர வாகனத்தை ஓட்டுவதற்கு எனக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல.

5) இந்த விபத்து சமயத்தில் மேற்படி இரு சக்கர வாகனத்தை ஓட்டும்போது தலைகவசம் அணிந்திருந்ததாக எனது நிருபண வாக்குமூலத்திலும் மனுவிலும் சொல்லி உள்ளேனா என்றால் சொல்லவில்லை. 25.10.2023-க்கு பின்னிட்டு தொடர் சிகிச்சை எடுத்து கொண்டதற்கான ஆவணம் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் ஒரு கடையை நடத்தி வந்ததாக சொல்லி ஒரு விசிடிங் கார்டு தாக்கல் செய்துள்ளேன் (ம.சா.ஆ.11) அது வழக்கிற்காக தயார் செய்யப்பட்டவை என்பதால் தான் அதில் கடை முகவரியோ ஜிஎஸ்டி எண்ணோ இல்லை என்றால் சரியல்ல.

6) இந்த மனுவிற்காக வேண்டி மாதம் ரூ.50000/- சம்பாதித்தாக பொய்யாக சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல. இந்த விபத்து என்னுடைய கவனக்குறைவாலும் அஜாக்கிரதையாலும் தான் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனவே 2ம் எதிர்மனுதாரர் இந்த விபத்து குறித்து எவ்வித இழப்பீடும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. இந்த விபத்து என்னுடைய கவனக்குறைவாலும் அஜாக்கிரதையாலும் தான் ஏற்பட்டது என்பதால் தான் மாதிரி வரைபடம் மற்றும் குற்ற பத்திரிக்கை நான் தாக்கல்

செய்யவில்லை என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரர் பொறுத்து இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S

Digitally signed by GANESAN S
Date: 2026.03.05 17:23:02 +0530

**Accidents Claim Tribunal,**
**Attur.**